**04.02.2026**

DVC.No.08/2020 ஜெயசீலிபிரித்தா த/பெ. சூசைதாஸ் PW1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர்கள் தரப்பில்)**

நான் தாக்கல் செய்த மனுவில் எதிர்மனுதாரர்கள் என்னை எந்த தேதியில் கொடுமை செய்தார்கள், அடித்தார்கள், துன்புறுத்தினார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரர் பள்ளியில் பணிபுரிர்ந்து ரூ. 40,000/- வருமானம் பெற்று வருகிறார் என சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் சகோதரரின் மனைவி என்னுடைய சகோதரி என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும், அவருக்கு குடிப்பழக்கம் எந்த காலத்திலும் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருப்பதாக இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும், நான் விவாகரத்து கேட்டு தாக்கல் செய்த வழக்கிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அரசு ஊழியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். விவாகரத்திற்கு பின்னர் எனக்கு மறுமணம் ஆகி தற்போது குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் மனுவில் என்ன பரிகாரங்கள் கேட்டுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மனுவில் கேட்டுள்ள முதலாவது பரிகாரமான ரூ.25,00,000/- நஷ்ட ஈடு கொடுக்கும் அளவிற்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தகுதியுடைவர்கள்

அல்ல என்றாலும், அந்த பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டுள்ள ஜீவனாம்ச பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எங்களது உறவினர்களும், 1ம் எதிர்மனுதாரரின் உறவினர்களும் பேசி எனது சீர்வரிசை பொருட்களை எடுத்துக் கொண்டு தற்போது 1 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர்களின் வீட்டில் திருமணத்திற்கு பிறகு 20 நாட்கள் தான் இருந்தேன் என்றாலும், அந்த காலத்தில் எதிர்மனுதாரர்கள் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.02.04 15:40:00 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி